# தர்ம வாஹினி

☼

பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா

☼

தமிழாக்கம்

Published by

Sri Sathya Sai Books and Publications Trust, Tamilnadu

Old No. 16/ New No.41, Ramakrishnan Street,

Perambur, Chennai-600011.

## அத்தியாயம் 2

தர்மம் என்பது ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்கோ ஒரு குறிப்பிட்ட நாட்டுக்கோ உரிமையானதல்ல. அது பிரபஞ்சம் முழுவதிலும் உள்ள எல்லா உயிரினங்களின் விதியோடு இறுக்கப் பிணைக்கப்பட்டுள்ளது. எந்நாளும் மங்காத ஒளிவிளக்கு அது. கிருஷ்ணன் கீதையை அர்ஜுனனுக்கு மட்டும் போதிக்கவில்லை. மனித குலம் முழுமைக்கும் பயன்பட வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் போதித்தார், அர்ஜுனன் அதற்கு ஒரு கருவியாக நின்றான். அந்தக் கீதை தான் மக்களை இன்று நல்வழிப்படுத்தி வருகிறது. ஒரு குறிப்பிட்ட இனத்துக்கோ, ஒரு குறிப்பிட்ட நாட்டுக்கோ அல்லது மதத்திற்கோ மட்டும் சொந்தமானதல்ல கீதை . உலக மக்கள் அனைவர்க்கும் உயிர் மூச்சுப் போன்றது அது.

தர்மத்தைத் தொகுத்து வெளியிட்ட மனிதர்களைப் பொறுத்து தர்மம் பல உருவங்களில் தோற்றமளிக்கிறது. மனு என்பவர் தொகுத்தளித்தார் மனுதர்மம் என்றும், ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் கையாளும்போது வர்ணதர்மம் என்றும் வாழ்வின் ஒரு குறிப்பிட்ட நிலையில் கைக்கொள் ளும்போது கிருஹஸ்த தர்மம், வானப்பிரஸ்த தர்மம் எனவும் குறிப்பது போன்று தர்மம் பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. ஆனால் மேலே சொல்லப்பட்ட அறங்கள் எல்லாம் அடிப்படையான ஆத்ம தர்மம் அல்ல. பழக்கத்தில் உள்ள முறைகள் தான். இந்த ஆசார தர்மம் (பழக்கத்தில் உள்ள தர்மம்) என்பது லௌகிக உலகில் மனிதனுக்கு ஏற்படும் பிரச்சனைகள், தேவைகள், தொடர்புகளைப் பற்றியும். இந்த விதிமுறைகளுக்கு முக்கிய கருவியான இந்த உடலே நிலையானதல்ல. அப்படியிருக்கும்போது இந்த ஆசாரதர்மங்கள் மட்டும் எவ்வாறு நிரந்தரமானவையாக இருக்க முடியும். ஆனால், அவைகளை உண்மையான தர்மங்கள் என்று கூறுவதற்கியலாது பொய்மையில் இருந்து உண்மை தோன்றுமா ! இருளில் இருந்து ஒளியைப் பெற முடியாது. அழியாமை அமரத்துவத்திலிருந்துதான் தோன்றும். சத்தியம் சத்தியத்திலிருந்துதான் வெளிப்படும். வௌக்க வாழ்வில் மேற்கொள்ள வேண்டிய தர்மங்கள் (ஆசார தர்மங்கள்) அந்தந்த நிலையைப் பொறுத்து முக்கியமானதாக இருந்தாலும் ஆத்ம தர்மத்தை தெளிவாகப் புரிந்து கொண்டு, ஆசாரதர்மங்களை அநுஷ்டிக்க வேண்டும். அப்பொழுது ஆன்மிகத்

தூண்டுதல்களும், லௌகிக தூண்டுதல்களும் ஒன்று சேர்ந்து, ஒத்துழைத்து, பேரின்ப நிலையை அருளும்.

அன்றாடக் கடமைகளில் லௌகிக தர்மத்தின் உண்மை மதிப்பை, பிரேமை நிரம்பிய செயல்களாக மாற்றினால் அதுவே ஆத்ம தர்மத்துக்கு உள்ளுறையும் இறைவனுக்கு - ஆற்ற வேண்டிய கடமையை நிறைவேற்றியதாகும். வாழ்க்கையை ஆன்மிக அடிப்படையில் அமைத்துக் கொண்டால் முன்னேறுவது உறுதி. |

கடவுளைக் கல்லாகக் காண்பது இன்றைய நாகரிகம். கல்லைக்கூடக் கடவுளாக காண்பதை விட்டு, கடவுளையே கல்லாகக் காணும் போது, அந்த முயற்சி எவ்வாறு மனிதனை சத்தியத்தை நோக்கி நெருங்கச் செய்யும் ? இறைவனின் திருஉருவத்தை தியானித்து, மனதில் பதியவைத்துக் கொண்டு, பின்னர் அந்த அழகிய திருஉருவைக் கல்லில் உருவகப்படுத்தினால், கல்லில் கடவுளைக் காணலாம். இந்த நிலை உறுதிப்படும் வரை இந்த முறையைக் கையாள வேண்டும். இதே வழியைப் பின்பற்றி எங்கும் நிறைந்த ஒரே பொருளான ஆத்மதத்துவத்தை (ஆத்ம தர்மத்தை) மனத்தில் பதிய வைத்துக் கொண்டு, அந்த நம்பிக்கை திருஷ்டி இவைகளைக் கொண்டு பலவிதமான உலகியல் செய்திகளையும், அதன் கவர்ச்சிகளையும், முரண்பாடுகளையும் அணுக வேண்டும். ஆத்ம ஞானத்தைப் பெற இதுவே வழி. இந்த முயற்சியில் வெற்றிபெற்றுவிட்டால், பின்னர் ஆத்ம தர்மத்தின் உண்மைக் கருத்து மாறாது.

கல்லைக் கடவுளாக வணங்கும் போது என்ன நேருகிறது? எல்லையற்ற, எங்கும் நிறைந்த பரம்பொருளை, முழுமுதற் கடவுளை ஒரு குறிப்பிட்ட பொருளில் திட உருவில் (ஸ்தூல ரூபம்) காண்கிறாய். அது போல பிரபஞ்சம் முழுமைக்கும் உரித்தான, சமமான, தடையற்ற தர்மத்தை ஒரு சிறிய செயலில் புகுத்திச் சுவைக்கலாம். இது சிரமமான செயல் அல்ல. கவலையையும், பயத்தையும் தரக்கூடிய எத்தனையோ சிரமமான செயல்களில் ஈடுபட்டுச் செயலாற்ற வில்லையா? அப்படியிருக்கும் போது, விவேகமுள்ள மனிதன் மனத்துக்குச் சாந்தி அளிக்கக் கூடிய உயர்ந்த உயர்வை நல்கும்.

வேதாந்தங்களும், ஆன்மிக சாஸ்திரங்களும், தர்மமும் அடிமையாக வாழ்வதற்காக அல்ல. தலைவனாக வாழவே உன்னை அழைக்கின்றன. அப்படி நீயே பகவானாக மாறும் போது, உன் செயல்கள் அனைத்தும் காம்ய கர்மமாக (பலனை எதிர்பார்க்கும் செயல்கள்) இல்லாமல், கர்ம கர்மமாக மாறி விடும். செயலின் தன்மையை மட்டும் மாற்றி விடுவதால் அடிமை விலங்குகள் அறுபடுவதில்லை. பார்வையைத் தேகத்திலிருந்து, தேவனை நோக்கித் திருப்புவதால் மட்டுந்தான் அந்த விலங்குகளைத் தறிக்க முடியும். அப்பொழுது நற்பண்புகள் உறுதிப்படும்.

யாரிடமாவது சென்று வேலைக்கமர்வது அடிமைத்தனம் என்றும், வீட்டில் பணியேதும் இன்றி நாளை வீணே கழிப்பது சுதந்திரம் என்றும் சிலர் கருதுகிறார்கள். இது அறிவுக்குறைவையே காட்டுகிறது. பணிபுரியும் இடத்தில் அதிகாரிக்கு பணிந்து தான் நடக்க வேண்டும். வீட்டிலேயே இருந்தால் மட் டும் உறவினர்களுடைய அதிகாரத்துக்கும், கட்டாயத்திற்கும் ஆட்படுவதில்லையா? நண்பர்களுக்கு இடையில் இருக்கும் போது கூட அவர்களுடைய விருப்பத்துக்கு விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கிறது. அவ்வளவு ஏன்? என் உடம்புதானே என்று அதை பற்றி கவலைப்படாமல் இருக்க முடிகிறதா? அதனுடைய தேவைகளுக்காகவும் வசதிகளுக்காகவும் சிறிதளவாவது சிரமப்படத்தான் வேண்டியிருக்கிறது. இது கூட அடிமைத் தனம் தான், இல்லையா? மனிதனால் பற்றுதலிலிருந்து விடுபடுவது என்பது எளிய செயலல்ல. உடலாகிய சிறையில் ஆத்மா வாழ்வதாக எண்ணிக்கொண்டிருக்கும் வரையில், தண்டனையில் சிறிது மாறுதல் இருந்தாலும் வாழ்வே சிறைக்கூடம் தான்.

''உடலே நான் என்ற உணர்வினால் தோன்றும் அக்காரமே நரகம். நரகம் என்பது வேறு எதுவுமில்லை" என்று சங்கரர் கூறியிருக்கிறார். இப்படிப்பட்ட அகங்காரம் தெய்விகத்துக்கு எதிரான நிலை. உலக முழுவதிலும் நிறைந்து கிடக்கும் முட்களையும், கூழாங்கற்களையும் நீக்குவது என்பது ஆகக் கூடிய செயலா? அதனால் அவைகளின் துன்பத்திலிருந்து தப்பிக்க வேண்டுமானால் காலணிகளை அணிந்து கொள்ள வேண்டும் அது போலவே, வேதாந்த தத்துவங்களின் துணைகொண்டு, சத்தியத்தின் மேல் பார்வையைப் பதிய

வைத்து, 'நானே பிரம்மம்'' என்ற நம்பிக்கையுடன் இருப்பாயானால் உலகியல் துன்பங்களை எளிதில் கடந்து விடலாம். அப்பொழுது சத்திய தர்மத்தைக் கைக்கொள்வது கூடச் சிரமமான செயலாக இருக்கிறது

எல்லாவிதமான அடிமைத்தனத்துக்கும் இருப்பிடமான இந்த உடலுக்கு நான் அடிமையல்ல, நான் இதன் தலைவன்; இதை என் விருப்பத்துக்குத் தக்கபடி கையாளுவேன். நான் சுதந்திரமான ஆத்மா என்று உறுதியாக சொல்ல வல்லவர் மீட்சியடைந்த மனிதன் என்று கூறலாம். இந்த விதிமுறைகள் எல்லாம் அகங்காரத்தை ஒழிப்பதற்குத்தானேயன்றி, வளர்ப்பதற்கல்ல. மகன் கொடுமைப்படுத்துகிறான் என்று மகள் வீட்டுக்குப் போய் வாழ்வது சுதந்திரமாகது. அகங்காரம் வளர அதுவும் ஒருவழி. புலனின்பத்திற்கு அலையும் முயற்சியைத் தர்மம் என்று கூறுவது தவறு.

வீடு என்பது என்ன? தொந்தரவு இன்றி ஓரிடத்தில் அமர்ந்து இறைவனை நினைத்து தியானம் செய்து, பேரானந்தத்தை அனுபவிக்க வசதியையும், சந்தர்ப்பத்தையும் அளிக்கக்கூடிய அமைதியான இடமே வீடு. இதைத்தவிர மற்ற வசதிகள் இல்லாமற் போனால் கூட கவலையில்லை. ஆனால் இறைவனை நினைத்து மகிழ்ந்து அதில் ஆழ்ந்து போக வசதி இல்லா வீடு வீடல்ல.

இறைவனோடு ஒன்றிவிடுதலும், உண்மையான மீட்சியைத் தேடிக் கொள்ளுதலும் ஆக இவைகளைப் பெற முயற்சிப்பதுதான் மனிதன் மேற்கொள்ள வேண்டிய தலையாய அறம் ஆகும். இந்த நிலையை அடைந்தவனை இருண்ட சிறைக்கூடத்தில் அடைத்தாலும் அவன் சுதந்திர மனிதனே. அதுவுமன்றி உடலைத்தான் சிறைப்படுத்த முடியுமே தவிர, ஆன்மாவைச் சிறைப்படுத்த யாரால் இயலும்? உடலுக்கு அடிமையானவனுக்கு ஒற்றை அருகம்புல்லும் கொலைக் கருவியே. அந்த ஒன்றைக் கொண்டு கூட அவன் உடலை மாய்த்துவிடலாம்.

ஆத்மானந்தத்தில் திளைத்தல், உள்ளொளியை வளர்த்தல், இறைவனும் மனிதனும் ஒருவரே என்ற அபேத நிலையில் நம்பிக்கை கொள்ளுதல், சர்வமும் பிரம்மமே என்று உணர்ந்து கொள்ளுதல் ஆகிய இந்த நான்கும் தான்

உண்மையான தர்மங்கள். ஒவ்வொரு தனி மனிதனும் உலக வாழ்வில் மகிழ்ச்சியடைவதற்காகவும், பயிற்சிப்பதற்கு எளிமையாக இருப்பதற்காகவும் இந்த நான்கையும் சத்தியம், சாந்தம், பிரேமை, அகிம்சை என்று சொல்லுகிறோம். இவை ஆத்ம சொரூபனான ஒவ்வொரு தனி மனிதனும் அன்றாட வாழ்க்கையில் பயிலுவதற்கு எளிமையானவை. பண்டைக்காலத்தைப் போல தர்மத்தை பின்பற்றுவதற் கான வழி என்னவென்றால், இந்த உயர்ந்த தத்துவங்களை செயலாகவும், நினைவாகவும் மாற்றிக்கொள்வது தான். சத்தியம், சாந்தம், பிரேமை, கொல்லாமை (அகிம்சை) என்பன இடையாத ஆத்மானந்தம். இதைப் பெற ஆன்மிக சத்தியத்தின்மேல் மாறாத உள்நோக்கு, மனிதனின் உண்மை தன்மையைப் பற்றிய சிந்தனை, அனைத்தும் பிரம்மமயம் என்ற ஞானம் ஆகியவை தேவை.

மூலப்பொருள், அதிலிருந்து வந்த செய் பொருள் ஆகிய இரண்டும் ஒத்துழைத்தால்தான் வாழ்வில் இசைவைக் காணலாம். கைகளில் மாட்டப்பட்ட சங்கிலி எந்த உலோகத்தால் செய்யப்பட்டிருப்பினும் சரியே, இரும்பாயினும், பொன்னாயினும் அது பிணைக்கும் இயல்புடையதுதான். நீ மேற்கொண்டுள்ள செயல் எப்படியிருந்த போதிலும் அது ஆத்மதத்துவத்தை ஆதாரமாகவும், ஆத்மதர்மத்தை அடிக்கல்லாகவும் கொண்டிருந்தால் அது அறத்தின் பாற்பட்ட செயலே என்பதில் ஐயமில்லை. அப்படிப்பட்ட செயல் சாந்தியை அளிக்கும். அகங்காரம், பயம், பேராசை ஆகியவைகளுக்கு உள்ளத்தில் இடம் தந்தால், வீட்டின் தனியறையிலோ, தபோவனத்தின் தனிமை யிலோ அல்லது வேறு எந்த இடத்தில் சென்று தஞ்சமடைந்தாலும் சரி , துன்பத்திலிருந்து தப்ப முடியாது. நாகம் சுருண்டு படுத்திருந்தாலும் அது விஷத்தன்மையுடையதே. ஆத்ம தத்துவத்தை ஆதாரமாகக் கொண்ட செயல்கள் அனைத்திலும் தர்மம் என்ற முத்திரை பதிக்கப்படுகிறது. சுயநலம், சௌகரியம் ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டு கடமையைச் செய்யும் போது, அங்கே தர்மம் மறைந்து விடுகிறது. அது எவ்வளவு அழகு பொருந்தியதாக இருந்தாலும் அது ஒருவகைப் பிணைப்பே. சிறையிலகப்பட்ட மனிதனை சிறைக் காவலர்கள் அங்கும் இங்கும் தள்ளிக் கொண்டு போவதைப் போல, புலன்கள் அவைகளுக்கு அடிமைப்பட்ட மனிதனைத் துன்பசாகரத்தில் ஆழ்த்தவல்லது.

இவன் என் நண்பன், இவன் என் பகைவன் என்ற நினைவு கூடத் தவறானது. இந்த மயக்கத்தை உதறித்தள்ள வேண்டும். அன்பே உருவான இறைவன்தான் அனைவருக்கும் நண்பன், உறவினன், துணைவன், வழிகாட்டி, காவலன் ஆகிய அனைத்தும். இதை மனதில் கொண்டு, இந்த நினைவுடனேயே வாழ் கையை எடுத்து. ஞானத்தின் அடிப்படையில் எழுப்பபட்டது தர்மம், தர்மத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட வாழ்க்கை இதுதான். இந்த ஆதார உண்மைகளை மறந்து, வெளியுலக ஆசைகளில் மனதைப் பறிகொடுத்தால் ஒருநாளும் இலட்சியத்தை அடைய முடியாது. இறைவனை இறுகப் பற்றினாலொழிய, உலகப் பற்றினை விட முடியாது. வானத்தின் மேல் பார்வையைச் செலுத்திக்கொண்டு, பூமி கண்ணுக்குத் தென்படவில்லையே என்று சொல்லுவதால் பயன் என்ன? பூமியில் உள்ள நீர்நிலைகளை உற்றுப் பார். ஒரே சமயத்தில் பூமியையும், வானத்தையும் அதில் காணலாம். ஆத்ம தர்மத்தின் பயிற்சி முறையான சத்திய தர்மத்தை கடைப்பிடித்து ஒழுகினால் ஒவ்வொரு செயலிலும் ஆக்மாவின் நிழலைக் காணலாம். அப்பொழுது இறைவனிடம் நீ கொண்ட பற்றுதல், உலகப் பற்றைக்கூட நிவேதனப் பொருளாக மாற்றிவிடும். உன் லட்சியமும் மாறுபடாது: குறைவுபடாது. அதாவது, தேவையும், நிலைமையும் மாறுதலடையாது. தர்மம், ஆதாரமற்ற வழி முறைகள், பெயர்கள் ஆகியவைகளைச் சார்ந்து நிற்கவில்லை . நேராக வழி நடத்திச் செல்லும்: தூண்டுதல்கள், உணர்வுகள் ஆகியவைகளையே சார்ந்து நிற்கிறது.